# பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

இலக்கம் 20, வோட் பிளேஸ்
கொழும்பு 07.

2017.04.26

ஆணைக் குழுச் சுற்றறிக்கை இலக்கம் : **12/2017**

பல்கலைக்கழக துணை வேந்தர்கள்

வளாக அதிபதிகள்

நிறுவகப் பணிப்பாளர்கள்

<u>பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் உள்ளகப் பரீட்சைகளுக்கான செலுத்துகை வீதம்</u>

மேற் குறிப்பிடப்பட்ட விடயம் தொடர்பாக வெளியிடப்பட்ட 2012/04/23 ஆம் திகதிய 981ஆம் இலக்க ஆணைக் குழுச் சுற்றறிக்கை மீது தங்களது கவனம் ஈர்க்கப்படுகின்றது.

02. **2012/04/23** ஆம் திகதிய 981 ஆம் இலக்க ஆணைக் குழுச் சுற்றறிக்கையுடன் இணைக்கப்பட்டிருக்கும் அட்டவணை II - மதிப்பீடு (இளமாணிப் பட்டம்) இல் "தாள்" எனக் குறிப்பிடப்பட்டிருக்கும் வசனத்தை "விடைத் தாள்" என திருத்தியமைப்பதற்கு தனது 952 ஆவது ஆணைக் குழுக் கூட்டத்தின்போது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு தீர்மானித்துள்ளது.

03. மேலும், தவணை அல்லது செமஸ்டர் (கல்வி அரையாண்டு) அடிப்படையில் தொடர்ச்சியான மதிப்பீட்டுக் கட்டமைப்புக்கு ஏற்ப நோக்கும்போது உச்சளவாக 04 மதிப்பீடுகள் வரையிலான தொடர்ச்சியான மதிப்பீடுகளுக்கான கட்டணக் கோரிக்கைகள் இறுதிப் பரீட்சையின் **25%** வீதம் எனும் அடிப்படையில் இறுதிப் பரீட்சைக்கான கட்டணக் கோரிக்கைகளுடன் வருடாந்தம் சமர்ப்பித்தல் வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது.

04. மேற்குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகள் 2017.04.01 ஆம் திகதி தொடக்கம் அமுல்படுத்தப்படுவதுடன் 981 ஆம் இலக்க ஆணைக் குழுச் சுற்றறிக்கையின் ஏனைய ஏற்பாடுகளில் எவ்வித மாற்றங்களுமின்றி அமுலில் இருக்கும்.

05. தயவு செய்து இதன் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளவும்.

ஒப்பம் : பேராசிரியர் மொஹான் த சில்வா

தலைவர்

பிரதிகள்:-

1. செயலாளர், உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு.
2. தலைவர் அலுவலகம், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
3. உப தலைவர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
4. உறுப்பினர்கள், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
5. செயலாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
6. பீடாதிபதிகள்.
7. பல்கலைக்கழகங்களின் பதிவாளர்கள்.
8. கணக்காளர், பல்கலைக்கழகமானியங்கள் ஆணைக்குழு.
9. பல்கலைக்கழகங்களின் நிதிப் பொறுப்பாளர்கள் (Bursars).
10. நூலகர்கள், சிரேஷ்ட உதவி நூலகர்கள், உதவி நூலகர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள்.
11. பிரதிப் பதிவாளர்கள் /சிரேஷ்ட உதவிப் பதிவாளர்கள்/ உதவிப் பதிவாளர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள் /வளாகங்கள்.
12. பிரதி நிதிப் பொறுப்பாளரகள் /சிரேஷ்ட உதவிநிதிப் பொறுப்பாளர்கள்/ உதவிநிதிப் பொறுப்பாளர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள் /வளாகங்கள்
13. பிரதம உள்ளகக் கணக்காய்வாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
14. பல்கலைக்கழகங்களின் அரசாங்க கணக்காய்வு அத்தியட்சகர்கள்
15. உயர் கல்வி நிறுவகங்களின் சிரேஷ்ட உதவி உள்ளகக் கணக்காய்வாளர்கள் / உதவி உள்ளகக் கணக்காய்வாளர்கள்.
16. சகல தொழிற்சங்களினதும் செயலாளர்கள்.
17. கணக்காய்வாளர் நாயகம்.

கோப்பு இலக்கம் : UGC/HR/6/2/3